

# இயேசு கிறிஸ்துவின் கதை





SAMPLE

SOJ_Tamil_12_24pg.indd 1 11/6/14 4:12 PM


தேவன் உலகத்தைப் பூரணமானதாகப் படைத்தார், மக்களும் எல்லா மிருகங்களும் ஒருவரோடொருவர் சமாதானமாக இருந்தனர், தேவனும் அவர்களுக்கு மிக நெருக்கமாக இருந்தார்.
ஆதாம், இங்கே பாரேன்! நான் கூப்பிட்டதும் இந்த குட்டிப் பறவை என்கிட்டே வருது!
தேவன் நமக்கு நல்லவரா இருக்கிறாரு, இல்லே! நமக்கு எல்லாமே தந்திருக்காரு.
ஒரே ஒரு மரத்தின் கனியை மட்டும் சாப்பிடக் என்று தே சொல்லியிரு ஆனால் ஏவாளுக் அதன் மே ஒரு க அதைச் சா என்ன ஆகும் என்று பார்க்க நினைத்தாள்.
பாம்பின் உருவத்தில் வந்த த்தான் சோதி ான்.
சாப்பிடக்கூடாதுன்னு தேவன் சொன்னாரா, உண்மையாவா?
ஆமாமா, அதைத் தொட்டோம்னா செத்துப்போயி-டுவோமாம்.
சாப்பிட்டுத்தான் பாரேன்! பெரிய ஞானியா ஆயிடுவே!
ஒரே ஒரு கடி கடிச்சுப் பார்ப்போமே!
ஆதாம், இது ரொம்ப இனிப்பா இருக்குது, பாரேன்!

SAMPLE







## இரட்சிப்பு பற்றி தேவனின் வாக்கு


தேவனுக்கும் அவருடைய அருமையான படைப்புக்கும் நடுவே இருந்த அந்த அற்புதமான ஒற்றுமை சீர்குலைந்து போயிற்று. ஆதாமும் ஏவாளும் தங்களுடைய அறிவையும் வெட்கத்தையும் வைத்து ஒரு புதிய வாழ்க்கையைத் தாங்களே அமைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

ஆனால், தமது படைப்பை மீட்டுக்கொள்ள தேவன் ஏற்கனவே ஒரு திட்டம் போட்டுவிட்டார். ஒருநாள், தமது மக்களுக்கு ஒரு இரட்சகரை அனுப்புவேன் என்று வாக்களித்தார்.

SAMPLE



SOJ_Tamil_12_24pg.indd 3 11/6/14 4:13 PM




SAMPLE



SOJ_Tamil_12_24pg.indd 4 11/6/14 4:13 PM


மக்கள் மற்றவர்களுக்குத் தீமை செய்தார்கள்.
மக்கள் பயந்து பயந்து வாழ்ந்தனர், கவலைப்பட்டனர், நம்பிக்கை இன்றி கலங்கினர்.
யாராவ
யோ, என்னை
தீங்க!
SAMPLE
உலகின் இராஜ்யங்கள் எல்லாம் ஒன்றையொன்று அடித்துக்கொண்டன.
பூமியில் எங்கு பார்த்தாலும் சாவுதான்

## இயேசு எனது பாவங்களையும் நீக்கிப்போட வேண்டும் என்று கேட்பது எப்படி? இந்த படிகளைப் பின்பற்று.

நீ எப்பொழுது வேண்டுமானாலும் இயேசுவுடன் பேசலாம். சத்தமாகவோ, உன் மனதிற்குள் மெதுவாகவோ எப்படி வேண்டுமானாலும் பேசலாம்.

**படி 1** – இயேசு உனக்காகச் செய்த எல்லாவற்றுக்காகவும் அவரை நேசிக்கிறாய் என்பதை அவரிடம் சொல்லு. அவருக்கு நன்றி கூறு.

**படி 2** – நீ செய்த கெட்ட காரியங்களுக்காக மனம் வருந்துகிறாய் என்பதை இயேசுவிடம் சொல்லு. பாவத்தை விட்டு விலகவும், அவரிடம் திரும்பவும் விரும்புகிறாய் என்பதைச் சொல்லு.

**படி 3** – இயேசு உன்னை மன்னிக்க முடியும் என்று நம்புகிறாய் என்பதை அவரிடம் சொல்லு.

**படி 4** – உன்னை மன்னிக்கும்படி இயேசுவிடம் கேள். உன் வாழ்நாள் எல்லாம் அவரையே பின்பற்ற விரும்புகிறாய் என்பதை அவரிடம் சொல்லு. அவருக்காகவே வாழ விரும்புகிறாய் என்று சொல்லு.

**படி 5** – தேவன் உன் ஜெபத்தைக் கேட்டு, உன்னை மன்னித்து விட்டதற்காக அவருக்கு நன்றி சொல்லு. இயேசு உன்னை இரட்சித்து விட்டார். இனி நீ அவருக்கே சொந்தம்.

### இரட்சிப்பின் கீதம்

இயேசுவே, நீர் சிலுவையில் மரித்தீர்
கெட்டோரை மீட்க மீண்டும் எழுந்தீர்
என் பாவங்களை எல்லாம் மன்னியும்
என் இரட்சகராய், ஆண்டவராய், நண்பராயிரும்
என் வாழ்வை மாற்றிப் புதிதாக்கும்
ஆண்டவரே, உமக்காகவே வாழ உதவும்

இன்று இயேசு கிறிஸ்துவை என் வாழ்வின் இரட்கராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டேன்

என் பெயர்:

நாள்:

### இன்னும் அறியலாம்!

தேவனையும் அவருடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் பற்றி இன்னும் அதிகமாக வேதத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். வேதத்திலிருந்து நீ படிக்கக்கூடிய சில பகுதிகள் இதோ:

- நம்முடைய ஒரே மெய்யான தேவ[illegible]ள இந்த உலகத்தைப் படைத்தவர். ஆதியாகமம் 1,2 அதிகாரங்கள்.
- மக்கள் எப்படி இந்த ஒரே மெய்யான தேவனை விட்டு வழிவிலகினார்கள். ஆதியாகமம் 3 ஆம் அதிகாரம்.
- இயேசுவின் வாழ்க்கை வரலாறு. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்.

SAMPLE

### பரவசமான வேறுசில படிகள்

**படி 1** – இயேசுவை நேசிக்கும் ஒருவரிடம் போய் உன்னுடைய தீர்மானத்தைப் பகிர்ந்துகொள். இன்றைக்கு இயேசுவைப் பின்பற்றுவதில் எத்தனை மகிழ்ச்சி, இனி வரும் வாழ்வில் நித்திய காலமாக பரலோகில் அவருடன் வாழ்வது இன்னும் எத்தனை ஆனந்தமாக இருக்கும் என்பதைப் பற்றிப் பேசுங்கள்.

**படி 2** – உன் வீட்டின் அருகில் இயேசுவின் நண்பர்கள் யாராவது ஒன்றாகக் கூடி ஜெபிக்கிறார்கள் என்றால், நீயும் போய் அதில் கலந்துகொள். இயேசுவைப் பின்பற்றுவேன் என்ற உனது தீர்மானத்தை உறுதியுடன் காத்துக்கொள்ள இதுவே சிறந்தவழி.

David C Cook
*transforming lives together*
www.globalchurch.com

© 2010 Text David C. Cook. © Illustrations Sergio Cariello. Publisher permission required to reproduce. All rights reserved. Doug Mauss, General Editor.
The Salvation Prayer as translated from the Salvation Poem by Matt and Sherry McPherson

The Story of Jesus Christ adapted from *The Action Bible*, created by David C Cook.